# இந்திய உச்ச நீதிமன்றம்

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு

உரிமையியல் மேல்முறையீடு எண் 2284/2019

(சிறப்பு அனுமதி மனு (உ) எண் 22394/2016-இலிருந்து எழுகிறது)

ஜோசப் ஈஸ்வரன் வாப்ஷேர் மற்றும் பலர் ... மேல்முறையீட்டாளர்கள்

-எதிர்-

ஷிர்லே கத்தீலீன் வீலர் ... எதிர்மேல்முறையீட்டாளர்

## தீர்ப்புரை

**மாண்புமிகு நீதியரசர் திரு. ஆர்.எ:ப். நரிமன்**

1. அறிவிப்பு சார்வு செய்யப்பட்டிருந்தபோதிலும், எதிர்மேல்முறையீட்டாளருக்காக யாரும் முன்னிலையாகவில்லை.

2. அனுமதி வழங்கப்பட்டது.

3. மேல்முறையீட்டாளரின் சார்பில் 16.03.2005 அன்று வழங்கப்பட்ட வாரிசுரிமைச் சான்றிதழை தள்ளுபடி செய்யும் நடவடிக்கையிலிருந்து தற்போதைய மேல்முறையீடு எழுகிறது.

4. 1-ஆம் மேல்முறையீட்டாளர் கோர்டென் வாப்ஷேர் என்பவருடைய மகனாவார். எட்வேர்ட் வாப்ஷேர் என்றழைக்கப்படும் ஒரு சகோதரர் கோர்டென் வாப்ஷேர்க்கு இருந்தார். அவர் பீட்ரைஸ் என்பவரை திருமணம் செய்துகொண்டதாக வெளிப்படையாகவே, இத்திருமணமானது அதனின்று குழந்தைகள் இல்லாத காரணத்தால் பயனற்றது. அவருக்கு இரு சகோதரிகளும் இருந்தனர், அதில் ஒருவர் செல்வி டார்த்தி வாப்ஷேர் திருமணம் புரியாதவர், அவர் தற்போது இறந்துவிட்டார் மற்றும் மற்றவரான செல்வி வைலட் வாப்ஷேர், அவர் திருமணம் புரிந்தவர் மற்றும் எலன் மேரி ஜாக்ஸன் என்றழைக்கப்படும் மகளை கொண்டிருந்தார். கார்டன் வாப்ஷேர் திருமணம் புரிந்தவர் மற்றும் இரு மகன்களை உடையவர் - அதில் ஒருவர்

1-ஆம் மேல்முறையீட்டாளராவார் மற்றும் இராபர்ட் பாபு வாப்ஷேர் என்றழைக்கப்படும் மற்ற மகன் இறந்துவிட்டார். 1-ஆம் மேல்முறையீட்டாளர், முறைப்படி திருமணம் புரிந்தார் மற்றும் இரு மகன்களை உடையவர். எங்களது முன்புள்ள எதிர்மேல்முறையீட்டாளரான செல்வி ஷிர்லே கத்தீலீன் வீலர், பீட்ரைஸ்ஸின் மகளாக கூறப்படுகிறது, அவர், இதில் மேலே தெரிவிக்கப்பட்டவாறு, எட்வார்ட் வாப்ஷேரின் மனைவியாவார்.

5. 18.01.1991 அன்று கார்டன் வாப்ஷேர் இறந்துவிட்டார். அதன்விளைவாக, நீலகிரி உரிமையியல் நீதிமன்றம், நீதிபதியின் முன்பாக அ.ம.எண். 17/2005-ஐ இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு 372-இன்கீழ் தாக்கல் செய்யப்பட்டது. அம்மனு அனுமதிக்கப்பட்டது மற்றும் 16.03.2005-ஆம் தேதியிடப்பட்ட வாரிசுரிமைச் சான்றிதழ் மேல்முறையீட்டாளரிடத்தில் வழங்கப்பட்டது. எதிர்மேல்முறையீட்டாளர், 28.03.2005-ஆம் தேதியிடப்பட்ட சட்டப்பிரிவு 383-இன்கீழ் ஒரு விண்ணப்பத்தில் வழங்கப்பட்டிருக்கும் வாரிசுரிமைச் சான்றிதழை தள்ளுபடி செய்ய வேண்டுரை விடுத்திருந்தார். அவர் பீட்ரைஸின் மகளாவார் மற்றும் இதில் மேலே தெரிவிக்கப்பட்டவாறு கார்டன் வாப்ஷேரின் சகோதரரான எட்வார்ட் வாப்ஷேருக்கு அல்லாமல் இரண்டாம் கணவருக்கு பிறந்ததால் வாப்ஷேர் குடும்பத்தினருக்கு எதிர்மேல்முறையீட்டாளர் ஒரு அயலவர் என இவ்விண்ணப்பத்தில், ஒரு எதிருரை தாக்கல் செய்யப்பட்டது. அதில் இது தெளிவாக கூறப்பட்டது.

6. அசல் மனு எண் 55/1993 என்ற வழக்கில், 1993-ஆம் வருடத்தில் பீட்ரைஸால் கார்டன் வாப்ஷேரின் உயில் மெய்ப்பிதழுக்கான விண்ணப்பம் ஒன்று செய்யப்பட்டது. 29.01.1999 அன்று பீட்ரைஸ் இறந்துவிட்டார். இம்மனுவானது சட்ட நடவடிக்கை இல்லாமைக்காக தள்ளுபடி செய்யப்பட்டது என்பது இதில் குறிப்பிடலாம். பீட்ரைஸின் சட்டமுறை வாரிசாக அவ்விடத்தில் பதிலாக அமர்த்தப்பட எதிர்மேல்முறையீட்டாளர் எத்தருவாயிலும் விண்ணப்பிக்கவில்லை.

7. நீலகிரி சார்பு நீதிமன்றத்தின் 10.04.2006-ஆம் தேதியிடப்பட்ட தன்னுடைய உத்தரவின்மூலம் எதிர்மேல்முறையீட்டாளர் எட்வார்ட் வாப்ஷேரின் மகள் இல்லை என்ற

நிலையில் அவர் ஒரு அயலார், எனவே, அவர் மறுத்தழித்தலுக்கான விண்ணப்பத்தை நிலைநிறுத்தமுடியாது என தீர்ப்பளித்தது. எந்த சந்தர்ப்பத்திலும், முந்தைய நீதிமன்ற நடவடிக்கை அற்றுபோய்விட்ட காரணத்தினால் வழக்கானது தரப்பினர்களிடையே முன்தீர்ப்பு மூலம் மறுதீர்ப்புத்தடை எனவும் சார்பு நீதிமன்றம் தீர்மானித்தது:

"முன்னதாக மறைந்த ஜி.ஒ. வாப்ஷேரின் நேரிடையான வாரிசுகளாக அ.ம.எண் 17/05-இல் உள்ள மனுதாரர்கள் என்பதால் 16.03.2005-ஆம் தேதியிடப்பட்ட அ.ம. எண் 17/2005-இல் மனுதாரர்களால் பெறப்பட்ட வாரிசுரிமை சான்றிதழை கேள்வி கேட்கும் ஏதொரு உரிமையையும் இவ்விண்ணப்பத்தில் செல்வி எலன் மேரி ஜேக்சனோ அல்லது தற்போதைய மனுதாரரான அவரின் மாற்றந்தாய் மகள் பெற்றிருக்கவில்லை. மரணமுற்ற ஜி.ஒ. வாப்ஷேர் தான் உயிருடன் இருந்தகாலத்தில் வள்ளியம்மாள் என்பவரை சட்டரீதியாக மணம்புரிந்தார் மற்றும் ஒரு ஆண் குழந்தையை பெற்றிருந்தார். அவர் ஈஸ்வரன் என பெயரிடப்பட்டுள்ளார். இம்மனுவில் 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் மற்றும் முறைப்படி இம்மனுவின் 2-ஆம் மற்றும் 3-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரை ஈன்றெடுத்தார். இம்மனுவில் 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் ஜி.ஒ. வாப்ஷேரின் மகன் என்ற நிலையில் மற்றும் 2-ஆம் மற்றும் 3-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்கள் இம்மனுவின் 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் என்ற நிலையின் காரணமாக ஜி.ஒ. வாப்ஷேரின் நேரிடையான வாரிசுகளாக உள்ளனர். அவர்கள் மட்டுமே மரணமுற்ற ஜி.ஒ.-இன் அசையும் அத்துடன் அசையா சொத்துகளை வாரிசுரிமை பெற உகந்தவர்கள் என்பது இம்மனுவின் எதிர்மேல்முறையீட்டாளர்களால் முழுமையாக நிலைநாட்டப்பட்டுள்ளது. ஜி.ஒ. வாப்ஷேரால் விட்டுச்செல்லப்பட்ட ஏதொரு இறுதி விருப்பாவணமுமின்றி, ஜி.ஒ. வாப்ஷேரின் சொத்துகளானது அவருடைய மகன் ஜோஸப் ஸ்வரன் லாப்ஷேர் மற்றும் அவருடைய மகள் டபிள்யு.இ. பிரின்ஸ் குமார் மற்றும் டபிள்யூ.இ. பிரவின்குமார் ஆகியோர்களுக்கு இயற்கையாகவே

சென்றடையும், ஜி.டி. வாப்ஷேரால் விட்டுச்செல்லப்பட்ட சொத்துகளை வாரிசுரிமை பெற உயிலோ அல்லது இறுதி விருப்பாவணமோ ஜி.ஒ. வாப்ஷேரால் விட்டுச்செல்லப்பட்டது என மனுதாரர் மேரி ஜாக்சன் மெய்பிக்க இயலும் என்றபோது முந்தைய வழக்குகள் அ.வ. எண் 41/97, 42/97 மற்றும் 86/96 ஆகியவற்றில் அவருடைய மாற்றாந்தாய் மகளான செல்வி எலன் மேரி ஜாக்ஸனின் கோரிக்கைகள் அற்றுப்போய்விட்டதாக தள்ளுபடி செய்யப்பட்டன என்பது இம்மனுவின் மனுதாரர் அவருக்கு தெரிந்திருக்கும் என்ற காரணத்தால் இம்மனுவில் மனுதாரரின் கோரிக்கையானது தீங்கான விளைவுகளுக்குள்ளானதாகும்."

8. மேற்படி தீர்ப்புரைக்கெதிராக சீராய்வு மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. 23.03.2015-ஆம் தேதியிடப்பட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரையின் வாயிலாக, ஒரே ஒரு காரணத்திற்காக மட்டுமே சீராய்வை உயர் நீதிமன்றம் அனுமதித்தது. அதாவது, முன் தீர்ப்பு மூலம் மறுதீர்ப்புத் தடைமீதான சார்பு நீதிபதியின் காண்முடிவு என்பது தவறானது. ஆயினும், எப்படியிருந்தாலும், மறுத்தழித்தல் விண்ணப்பம் நிலைநிற்கத்தக்கதல்ல மற்றும் எந்தச் சந்தர்பத்திலும் கார்டன் வாப்ஷேரின் நேரடியான நேர்வழிப் பிந்தையர் இல்லை என்ற நிலையில், எதிர்மேல்முறையீட்டாளர் எப்படியிருந்தாலும் கார்டன் வாப்ஷேரின் சொத்தின் வாரிசுரிமைபெற முடியாது என்று மனுதாரர்கள் வழக்குரைஞரால் வைக்கப்பட்ட வாதங்களை அது கவனித்தது. எனவே, உயர் நீதிமன்றம் 10.04.2006-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவை நீக்கறவு செய்தது மற்றும் தரப்பினர்களை கேட்டபின் வழக்கை புதிதாக தீர்மானிக்க சார்பு நீதிபதிக்கு வழக்கை விசாரணைக்கு மீண்டும் அனுப்பியது.

9. மேல்முறையீட்டாளர்கள் சார்பில் முன்னிலையாகும் கற்றறிந்த வழக்குரைஞர் திரு. ஆர். ஆனந்த் பத்மநாபன், பதிவுரு முழுதூடாக எங்களை நெடுநேரம் மிக கவனமாக எடுத்துச்சென்றுள்ளார் மற்றும் இந்திய வாரிசுரிமை சட்டத்தின் பல்வேறு வகையங்களை குறிப்பிட்டார். எதன்கீழ் வாரிசுரிமை சான்றிதழுக்காக விண்ணப்பம் தாக்கல் செய்யப்படவேண்டுமோ அந்த மேற்படி சட்டத்தின் பிரிவு 372-ஐ விவரிப்பது

அவசியமாகும். பிரிவு *372* பின்வருமாறு வாசிக்கப்படுகிறது:



"*372.* சான்றிதழுக்கான விண்ணப்பம் - *(1)* ஒரு சான்றிதழுக்கான விண்ணப்பத்தை ஒரு மனுவாகத் தயாரித்து அதில் கையொப்பமிட்டு மற்றும் உண்மை உறுதியுரை வரையும் செய்து மாவட்ட நீதிபதியிடம் தாக்கல் செய்தல்வேண்டும் அல்லது விண்ணப்பதாரருக்காக, உரிமையியல் விசாரணைமுறைச் சட்டம், *1908* *(5/1908)*-இல் குறிப்பிடப்பட்டமுறையில், அந்த விண்ணப்பதாரருக்காக கையொப்பமிட்டு மற்றும் உண்மை உறுதியுரை வரையும் செய்து, வழக்குரை ஒன்றை வாதிக்காக தாக்கல் செய்தல் வேண்டும். அதில் பின்வரும் விபரங்களைக் குறிப்பிடவேண்டும். அதாவது:-

*(அ)* நபர் ஒருவர் இறந்த காலம்;

*(ஆ)* நபர் ஒருவர் இறந்தபோது அவர் சாதாரணமாகக் குடியிருப்பைக் கொண்டிருந்த இடம், விண்ணப்பமானது எந்த நீதிபதியிடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதோ, அந்த நீதிபதியின் ஆள்வரைக்கு உட்பட்ட பகுதியில் இல்லாதிருந்தால், இறந்துபோனவரின் சொத்து எந்த எல்லைகளிலுள்ளது;

*(இ)* இறந்துபோனவரின் மற்றைய நெருங்கிய உறவினரின் குடும்பம் மற்றும் அவர்தம் உறைவிடங்கள் ;

*(ஈ)* இந்த உரிமையை மனுதாரர் எந்த வகையில் கோருகிறார்;

*(உ)* சான்றிதழ் வழங்குவதில் அல்லது சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தால் அதன் செல்லுந்தன்மைக்கு, பிரிவு *370*-இன்கீழ் அல்லது இந்த சட்டம் அல்லது வேறு ஏதேனும் இயற்றுச் சட்டத்தின்கீழ் தடையில்லை;

*(ஊ)* இந்தச் சான்றிதழ் பொருந்தும் கடன்கள் மற்றும் பிணையங்கள்.

*(2)* மனுவில் அடங்கியுள்ளவை எவையும் பொய்யானவை என்று அறிந்தே

அல்லது உண்மையற்றவை என்று நம்பியே நபர் ஒருவர் பொய்யுரைத்திருக்கின்றபோது, அவர் இந்திய தண்டனைச் சட்டம், *1860 (45/1860)*, பிரிவு *198*-இன் கீழ் குற்றமிழைத்தவராவார்.



*(3)* அத்தகையதொரு சான்றிதழக்கு விண்ணப்பிக்கின்றபொழுது, அது இறந்துபோன கடனாளருக்கு வரவேண்டிய கடனுக்காக அல்லது அவருக்கு வரவேண்டிய கடனின் பகுதி எதற்குமானதாக இருத்தல்வேண்டும்."

அதனுடனாக, அத்தகைய சான்றிதழை நீக்கப்படவேண்டுமெனில், பிரிவு *383*-இன்கீழ் ஏதேனும் ஒரு ஆதாரம் மெய்ப்பிக்கப்பட்டுவிட்டால், இதனை அவ்வாறு நீக்கலாம். சட்டத்தின் பிரிவு *383*-இன்கீழ் விவரிக்கப்பட்டுள்ளது:

"*383* சான்றிதழ் நீக்கம் - இந்த பகுதியின்கீழ் வழங்கப்பட்ட ஒரு சான்றிதழைப் பின்வரும் காரணங்கள் ஏதேனும் ஒன்றால் நீக்கம் செய்யலாம். அதாவது:-

*(அ)* சான்றிதழைப் பெறுவதற்கான நடைமுறைகள் பொருள் பிழைபாடுடையதாக இருந்திருக்கும்பொழுது;

*(ஆ)* பொய்யான விவரங்களைக் கூறி அல்லது வழக்கின் முக்கியமான விஷயங்களை நீதிமன்றத்தில் மறைத்து சான்றிதழை மோசடியாகப் பெற்றிருக்கும்பொழுது;

*(இ)* சான்றிதழை வழங்குவதற்குச் சட்டப்படி நியாயமான இன்றியமையாத சங்கதி அல்லாத பொய்க்கூற்றுகளின்பேரில் சான்றிதழைப் பெற்றிருப்பது, அத்தகைய கூற்று அறியாமையினால் அல்லது கவனக்குறைவால் ஏற்பட்டதாகக்கூட இருக்கலாம் ;

*(ஈ)* சூழ்நிலைகளின்மூலம் அந்த சான்றிதழ் பயனற்றதாகவும்,

செயற்படாததாகவும் இருக்கும்பொழுது;

*(உ)* சான்றிதழில் குறிப்பிடப்பட்ட கடன்கள் அல்லது பிணையங்களின் விளைவுகள் சம்பந்தமாக, வழக்கொன்றில் அல்லது நடைமுறை ஒன்றில் உரிய நீதிமன்றம், இந்த சான்றிதழை நீக்குவது சரியானதென்று தீர்ப்பாணை அல்லது உத்தரவு வழங்கியிருக்கும்பொழுது."



இத்தறுவாயில், பின்வருமாறு வாசிக்கப்படுகின்ற பிரிவு *33(அ)*-ஐ விவரிப்பது முக்கியத்துவம் வாய்ந்தது:

"*33(அ).* அவர் தமது நேரடி வழித்தோன்றல்களையும் விட்டுவிட்டு இறந்திருந்தால் அவரது சொத்தில் மூன்றில் ஒரு பாகம் அவரது விதவை மனைவியை சென்றடையும் மீதமுள்ள இரண்டு பாகங்கள், இதன்பிறகு அடங்கியுள்ள விதிகளின்படி அவரது நேரடி வழித்தோன்றல்களைச் சென்றடையும்;"

"நேரடி வழித்தோன்றல்கள்" எனும் சொற்றொடர் சட்டப்பிரிவு 25-இல் சுட்டுரைக்கப்பட்டுள்ளது. அது இதன்கீழே விவரிக்கப்பட்டுள்ளது:

"*25.* நேர்மரபு வழி குருதித் தொடர்புறவு - *(1)* நேர்மரபு வழி குருதித் தொடர்புறவு என்பது இரு நபர்களுக்கிடையில் அமைந்துள்ளது. அவர்களில் ஒருவர் மற்றொருவரின் நேரடியான வழியில் தோன்றிய வழித்தோன்றலாவார். அதாவது ஒரு மனிதருக்கும், அவரது தந்தைக்கும் இடையிலானதாகும் மற்றும் தாத்தாவுக்கும் தாத்தாவின் தந்தைக்குமிடையிலானதாகும் மற்றும் அது நேரடி ஏறுமுறையில் உள்ளதாகும் அல்லது அது ஒரு மனிதனுக்கும் அவளது மகனுக்கும் இடைப்பட்டதாகும், அல்லது ஒரு மனிதனுக்கும் அவனது பேரனுக்கும் இடையிலானதாகும், அல்லது ஒரு மனிதனுக்கும் அல்லது கொள்ளுப்பேரனுக்கும் இடையிலானதாகும். அது நேரடி இறங்கு வழித்தோன்றலைக் குறிப்பதாகும்.

2) ஒவ்வொரு தலைமுறையும் ஒரு படிநிலையைக் கொண்டிருக்கிறது. அது ஏறுவழித் தோன்றலையோ அல்லது இறங்குவழித்தோன்றலையோ கொண்டிருக்கிறது.

3) ஒரு நபரின் தந்தை, அவருக்கு முதல் படிநிலையில் உறவாகும். அதேபோன்று அவரது மகனும் உறவாகும். அந்த நபரின் கொள்ளுத் தாத்தாவும், கொள்ளுப் பேரனும் மூன்றாவது படிநிலையில் உறவாகும்."



பிரிவு 372-இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு எந்த ஒரு விண்ணப்பத்தில் அவசியமான விவரங்கள் உள்ளனவோ அதில் வாரிசுரிமை சான்றிதழ் வழங்கலாம் என்பது வாரிசுரிமை சட்டத்தின் மேற்கூறப்பட்ட வகையங்களை வாசிக்கையில் தெளிவாக்கப்படுகிறது. மேற்கூறப்பட்ட விவரங்களை விவரித்து மேல்முறையீட்டாளரால் விண்ணப்பம் தாக்கல் செய்யவேண்டும் என்பதில் ஏதொரு கருத்து வேறுபாடும் இல்லை. பிரிவு 383-இன்கீழ், அப்படி வழங்கப்பட்ட சான்றிதழை, அத்தகைய பிரிவில் விவரிக்கப்பட்ட காரணங்களுக்காக மட்டுமே நீக்கமுடியும். உட்பிரிவுகள் (அ) முதல் (உ) வரை ஏதேனும் ஒன்றில் தீரடைவு இல்லையெனில் நீக்கம் வழங்கமுடியாது. அது இம்மேல்முறையீட்டில் பொருண்மைகள் மீதான வழக்கு இல்லை என்பதை கவனிக்கப்படும். ஆகையால், இக்காரணத்தின்மீது மட்டுமே, அவ்வாறு வழங்கப்பட்ட வாரிசுரிமைச் சான்றிதழை நீக்கம் செய்ய மறுத்ததில் சாபு நீதிபதி காரணங்காட்டி நிரூபித்தார் என தெளிவாகிறது. வேறுவகையிலுங்கூட வாப்ஷேரின் குடும்பத்துடன் எவ்வகையிலும் செய்ய எதிர்மேல்முறையீட்டாளரிடத்தில் ஒன்றுமில்லை என்பது தெளிவாகிறது. இது அவருடைய 383 விண்ணப்பத்தில் அவரின் உறுதிக்கூற்றிலிருந்து தெளிவாகிறது. அதில், பத்தி 1-இல் அவர் தெரிவித்தது:

"1. மனுதாரர் திருமதி ஷீர்லே கத்தீலின் வீலரின் மனைவி மறைந்த திருமதி ஏ.ஜே. வீலரின் மறைந்த திருமதி பீட்ரைஸ் வாப்ஷேரின் மகளாவார். கிட்டத்தட்ட 68 வயதுடைய கிறிஸ்துவர், ஒரு பிரிடெனின் குடிமகன் மற்றும் 43, கட்டன்ஸ் கார்னர், ஹெறம்லின்டன், நார்போக்-என்.அர். 134 பி.எஸ்., இங்கிலாந்து, யுனைடெட் கிங்டம்மின் நிரந்தர குடியிருப்புவாசி

மற்றும் தற்போது நீலகிரி மாவட்டத்திலுள்ள காம்டன் எஸ்டேட், நடுவட்டம் போஸ்ட், உதகமண்டலத்தில் உள்ளார்".

10. எதிர்மேல்முறையீட்டாளர் மறைந்த எ.ஜே. வீலரின் மனைவியாகவும் மற்றும் மறைந்த பீட்ரைஸ் வாப்ஷேரின் மகளாக மட்டுமே தன்னை விவரிக்கிறார் என்பதை இதில் கவனிக்கப்படும். எட்வார்ட் வாப்ஷேரின் பெயரானது அதனுடைய இறாமையில் தெளிவாக தெரிகின்றதன்மூலம், அவர் எட்வார்ட் வாப்ஷேரின் நேர்வழிப் பிந்தையராக இல்லவேயில்லை என்பது தெளிவாக்கப்படுகிறது மற்றும் ஆகையால் வாப்ஷேர்



குடும்பத்துடன் எவ்வகையிலும் செய்வதற்கு ஒன்றுமில்லை. இதைத்தவிர, கார்டன் வாப்ஷேர் விருப்புறுதியாவணம் எழுதாமல் இறந்த காரணத்தினால், விருப்புறுதி மெய்ப்பிதழுக்கான விண்ணப்பத்தில் நிறுவப்பட்டிருக்கின்ற உயில் அற்றுப்போய்விட்டநிலையில், விருப்புறுதியாவணம் எழுதப்படாத சொத்தானது அவரின் விதவை மற்றும் அவரின் நேர்வழி பிந்தையருக்கு மட்டுமே சென்றடையும் என்பதை பிரிவு 33(அ) தெளிவாக்குகிறது. இன்று மேல்முறையீட்டாளர், அவருடைய இரு மகன்களுடன் சேர்ந்து, கார்டன் வாப்ஷேரில் வாழும் நேர்வழி குறுதி தொடர்புடையவர்களாவர். எப்படியிருந்தாலும் எதிர்மேல்முறையீட்டாளரானவர் இதன்மேலே தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவாறு ஒரு நேர்வழி குறுதி தொடர்புடையவர்களாகவோ அல்லது ஒரு குடும்ப உறுப்பினராகவோ அவரில்லை என்ற காரணத்தினால், அவ்வாறு வழங்கப்பட்ட வாரிசுரிமைச் சான்றிதழை நீக்கறவு செய்வதில் ஒரு நேர்வழி குறுதி தொடர்புடையவராகவோ அல்லது வாப்ஷேர் குடும்பத்தின் ஒரு உறுப்பினராகவோ எவ்வகையிலும் அக்கறை கொண்டிருக்கவில்லை என்பது மறுபடியும் இதில் தெளிவாக்கப்படுகிறது. சார்பு நீதிபதியின் முன்தீர்ப்பு மூலம் மறுதீர்ப்புத் தடை மீதான அவர் காண்முடிவு உத்தரவை நீக்கறவு செய்ததில் உயர் நீதிமன்றம் சரிபடுத்தியது என சேர்க்கமட்டுமே இயலும், ஆனால் அது விஷயத்தின் முடிவாகாது. உயர் நீதிமன்றமானது மற்ற இரு காரணங்களுக்குள் சென்றிருக்கவேண்டும். அது சார்பு நீதிபதியுடன் ஆதரவை கண்டறிந்து, அதை இது செய்திருக்கக்கூடாது.

11. வழக்கு இவ்வாறிருக்கையில், உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புரையை நீக்கறவு

செய்து மற்றும் கற்றறிந்த சார்பு நீதிபதியினுடையதை நாங்கள் மீட்டளிக்கிறோம்.

12. அதற்கிணங்க மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டது.

நீதியரசர் திரு. ரோஉறின்டன் பா.:.லி நரிமன்

நீதியரசர் திரு. வினித் சாரன்

புது டெல்லி,
பிப்ரவரி 26, 2019.



## <u>நிபந்தனை</u>

" வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துக்கொள்வதற்கான வரையறுக்கப்பட்ட பயன்பாட்டிற்கேயன்றி, வேறு எந்த நோக்கத்திற்கும் பயன்படுத்தப்படமுடியாது. நிறைவேற்றுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்ற அனைத்து நடைமுறைசார் மற்றும் அதிகாரப்பூர்வசார் நோக்கங்களுக்கும், தீர்ப்புரையின் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."